www.tamilarangam.net


# ஈழ விடுதலை

# EALA VIDUTHALAI

பொங்கு தமிழர்க்கு
இன்னல் விளைந்தால்
சங்காரம் நிஜமென்று
சங்கே முழங்கு
— பாரதிதாசன்

மலர் : 1 இதழ் : 3

ஆனி 1975 விலை 10p


## வாழ வேண்டுமானால் ஆள வேண்டும்!

உலகில் ஒடுக்கப்பட்ட இனங்கள் யாவும் தற்கால வாழ்க்கை போராட்டத்திற்கு ஈடுகொடுத்து 'வாழவேண்டுமானால் ஆளவேண்டும்' என்பதை உணர்ந்து நாளுக்குநாள் உரிமைப் போராட்டங்களுக்குள், தம்மை உட்படுத்தி வருவதைக் காணமுடிகிறது. மக்களிடையே ஏற்பட்டுள்ள எழுச்சி, சுயதேவைகளை பூர்த்திசெய்து அவசியமான பொருளாதாரத் திட்டங்களையும், அதற்கான முதலீடுகளையும், தம் சக்திகளையும் பகிர்ந்து நடைமுறைப்படுத்த அவர்களுக்குத் துணைவக் கொடுத்துள்ளது. இது, மக்களின் உள்ளங்களில் போராடும் உணர்வை வளர்த்துக்கொண்டிருப்பதால் பணபலம், ஆயுதபலம் வாய்ந்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்களை உணர்ந்து பின்வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு இவர்கள் பின்னடிக்கப்படுவதால் அம் மக்களினது வாழ்க்கைக்கு அவசியமான நிலம் பாதுகாக்கப்படுகின்றது! இது தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள, பௌத்த ஏகாதிபத்தியத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை எடுத்துக்காட்டி, எமது நிலத்தை நாம் பாதுகாக்க, குடியேற்றப் பட்டவர்கள் விரட்டப்படவேண்டுமென்ற முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது!

இத்தாக்கங்களால் முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களின் விற்பனவுச் சந்தைகள், மூலப்பொருள் கொள்வனவுச் சந்தைகள் பாதிக்கப் படுவதோடு, இங்கிலாந்து, கனடா, அமரிக்கா போன்ற மேலை நாடுகளில் பணவீக்கம், விலைவாசி ஏற்றம், வேலையில்லாத்திண்டாட்டம் என்பன அவர்கள் வரவு செலவுத் திட்டங்களை நேரடியாகப் பாதித்தும் வருகின்றன. இதை அந்நாடுகளின் மக்களும் ஆட்சியாளர்களும் ஆழமாகச்சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்கள்!

இங்கிலாந்தை எடுத்துக் கொண்டால், சில வருடங்களுக்குமுன் ஆங்கிலேயர்கள், உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்காகவும் மிகுந்த வேதனத்துக்காகவும் அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, போன்ற நாடுகளில் குடியேறினார்கள். அவர்கள் பிறநாடுகளுக்குக் குடிபெயர்ந்து போன தொகை இங்கிலாந்திற்குள் குடியமரவந்த ஆசிய ஆபிரிக்க, ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளின் மக்களிலும் அதிகமாகவே இருந்தது. இதனால் இலங்கையிலும் இருந்து கணிசமான தொகையினர், குறிப்பாக சிங்கள ஏகாதிபத்தியத்தால் நேரடியாகத் தாக்குண்ட தமிழர்கள், இங்கிலாந்துக்கு வந்து நிலைகொள்ள இடமிருந்தது! இன்று நியூசிலாந்து அரசு வெளிநாட்டவர் குடியேற்றத்தை நிறுத்திவிட்டது. அவுஸ்திரேலியாவும் கனடாவும் அவர்கள் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப விரைவில் நிறுத்திக் கொள்ளும் என்பதற்குரிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இப்போது முடிவாக பிரித்தானியர்கள் குடிபெயர்ந்துவாழ வேறுநிலம் இல்லா நிலை உருவாகிவருவது தென்படுகிறது!

மறுபுறம், தேசிய இனங்களின் எழுச்சி காரணமாக பிரித்தானிய கொலோனிய ஆதிக்க காலத்தில் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் குடியமர்ந்த ஆங்கிலேயர்களும், பிரித்தானியப் 'பாஸ் போர்ட்' பெற்ற ஏனையநாட்டவர்களும் குடிபெயர்ந்து பிரித்தானியாவில் குடியமருகின்றார்கள்! அடுத்து, ஐரோப்பியப் பொதுச் சந்தையில் பிரித்தானியாவின் பிரதிநிதித்துவம், பொதுச்சந்தை நாட்டு மக்களை இலகுவாகப் பிரித்தானியாவில் நுழைய வழி அமைத்துள்ளது. இந்நிலையில் மக்கள்தேக்கம் பிரித்தானியாவில் ஏற்படுவது தடுக்கமுடியாதது. இதுவே பிரித்தானியாவின் வேலையில்லாத் திண்டாட்டம், பண வீக்கம், விலைவாசியேற்றம் என்பனவற்றுக்கு மூலகாரணமாவது உள்ளங்கை நெல்லிக்கனி!

இப்பிரச்சனைகளை இந்த அரசு எப்படித் தீர்க்கும் என்பதை இந்நாட்டில் குடியமரவந்தவர்களும், வர ஆயத்தமாகவிருப்பவர்களும், குடியுரிமை கொடுக்கப்பட்டுள்ளவர்களும் தம்மைத் தாம் கேட்பதால்மட்டும் விடையை அறியமுடியலாம். ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்கள் எப்படியானவர்கள், என்ன கொள்கையுடையவர்கள் என்றாலும் அவர்கள் தம்மக்களின் விருப்பத்தின் படியே செயற்படவேண்டுமெனும் உண்மையை முதலில் யாவரும் ஏற்றுவிட வேண்டும்!

அடுத்து, குடியமர்வைப்பொறுத்த மட்டில் பொதுவாக எல்லாச் சோசலிச நாடுகளும், பெரும் பகுதியான முதலாளித்துவ நாடுகளும் வெளிநாட்டவர்களை ஏற்பதில்லை. இது எதிர் காலத்திலும் நடக்காது!

.......

(4ம் பக்கம் பார்க்க....)

**சுதந்திரம் மனிதனது பிறப்புரிமை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கம்-திட்டம்-வளர்ச்சி

ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கும், பொறுப்புக்கும், உணர்விற்கும் சிறிதும் ஊறு விளைந்திடாதவாறு செயற்படுவது பாராளுமன்றத்தின் கடமையாகும்! சொந்த நாட்டவர்களை ஐயந்திரிபின்றி சமத்துவமாக மதித்துப் பேணுவது அதன் இலட்சணமாகும்! நீதி, நியாயம், தர்மம் என்ற ஒரே அளவுகோல்களால் மதிப்பிட்டு ஒவ்வொரு குடிமகனையும், மாசு மறுவற்றவனாக வாழ்ந்து சமூகப் புனிதத்தைக் காத்து நடக்க வழிகாட்டுவது அதன் கடமை! மானிடனைப் பின்னிப் பிணைத்துள்ள அரசியலையும், சமூகத்தையும், பொருளாதாரத்தையும் கட்டி வளர்ப்பதுவே அதன் பொதுப்பணி!

இதில் ஒன்று தவறினும் அது நாடாளுமன்றத்திற்குள்ள இறைமையை மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாநிலையை உருவாக்கிவிடும். மக்களை ஆளும் தகுதியை இழந்துவிடும்.

இலங்கையில் வாழும் தமிழினத்தை முற்றாக, முழுதாக வேரறுக்கும் இலங்கைப் பாராளுமன்றம் தமிழர்களையும் ஆளுகின்றதென இனியும் தமிழினம் நினைக்குமானால் அது தங்களை ஆள தமிழினத்துக்கு நம்பிக்கையும், ஆசையும் இல்லை என்பதையே எடுத்துக்காட்டும். காங்கேசன்துறை இடைத்தேர்தலின் மூலம் தமிழ் நாட்டை அமைக்கும்படி நாமே நமக்கு ஆணையிட்டபின் இலங்கைப் பாராளுமன்றத்தில் நடக்கும் ஜனநாயக, சர்வாதிகார ஆட்சிகளைப்பற்றிக் கவலைப்பட நாம் யார்? இன்று சோசலிசப் போர்வையுள் ஒளிந்துநின்று, முக்கூட்டணி அரசு தமிழினத்தை அழிக்க எடுக்கும் நடவடிக்கைகளை நேரடியாகக் காணுகின்ற சோசலிச நாடுகள் வெளிப்படையாக எதிர்க்க முன்வராதவரை இனி ஆட்சி செய்யவருகின்ற எந்த முதலாளித்துவ சக்திகளையும் எந்த முதலாளித்துவ நாடுகளும் எதிர்க்கப் போவதில்லை. மாறாக, ஈழநாட்டை அந்நியனிடம் இருந்து பறிக்கும் முயற்சியை முறியடிக்க அவை பணவுதவியும், ஆயுதவிநியோகமும் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை!

ஆதலால் இலங்கை நாட்டில் ஜனநாயகம் நடந்தாலென்ன; சர்வாதிகாரம் நடந்தாலென்ன; ஈழத்தை ஆள நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் சிறிதும் குறையமுடியாது. வரப்போகும் எந்த ஆட்சியிலும் நாம் முறியடிக்க வேண்டிய எதிரியின் சக்தி கூடினாலும் குறைவுபடாது.

ஆதலால் இன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் இறுதித் தமிழர்களாக பிரதிநிதித்துவம் வகிப்பவர்களுக்கு உள்ள கடமை, இத்தனை காலமும் பாராளுமன்றம் தமிழர்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை உலகநாடுகளுக்கு பலமுறை திரும்பத்திரும்ப எடுத்துக்காட்டி, தமிழினத்தின் நிலையை உணர்த்தி விட்டதனால், இப்பொழுதே தனித்தனியாக ஒவ்வொரு நாடுகளையும் அணுகிப் பிரிவினைக்கு நேரடியான ஆதரவு கேட்பதாகும்! அதைவிடுத்து, எதிர்காலத்தில் இன்னும் மோசமான கொடுமைகள் தமிழர்கட்கு இழைக்கப்படும்; அதைக் கண்ணுற்ற உலகநாடுகள் நேரடியாகத் தமிழர்களிடம்வந்து 'உதவி தருகிறோம், ஈழ நாட்டை அமைப்பதற்குத் தயார்செய்யுங்கள்' என்று கூறுவார்கள் எனும் நம்பிக்கை கொண்டிருப்பதுபோல் இலங்கைப் பாராளுமன்றத்தைப்பற்றி எதிர்காலக் கனவுகள்கண்டு, அதை நிரூபிக்க நடப்பது மக்களை ஏமாற்றி அழித்ததாய் முடியும்!

இலங்கை நாட்டில் பேச்சுச் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் பறிக்கப்பட்டதுதான் இன்று பிரிவினைக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறதென்றோ சிங்கள ஜனநாயக ஆட்சி வந்தால் தமிழர் பகுதிகளைப் பிரித்துக் கொடுத்துவிடுவார்கள் என்றோ மக்களை நம்பவைக்கலாம் என முட்டத்தனமாக எண்ணக் கூடாது.

மக்களும் இவைகளை உள்ளுணர்வோடு புரிந்துகொண்டு இனி வரப் போகிற இடைத்தேர்தல்களையும் முற்றாகப் புறக்கணித்து, தமிழ்மக்கள் தம்மை தாமே ஆளுகின்றார்கள் என்பதை இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிப்பதை நிறுத்துவதின்மூலம் எடுத்துக்காட்டி, உறுதிப்படுத்த வேண்டும்!

அத்தோடு, உணவு—உடை—இல்லம்—தொழில் என்பவைகளைத் தமிழர்களிடமும் தமிழ்மண்ணிலும் தேடிப்பகிர்வதுகொண்டு நம்மைநாம் ஆளுகின்றோம் என்பதை நாளாந்தம் மனதில் உறுதிசெய்யவேண்டும்! அப்படி உறுதிகொண்டு, வாழும் தமிழ் உள்ளங்களாலேயே தமிழர் ஆட்சியை நிலைநாட்ட முடியும்! அவ்வுள்ளங்களே தனிநாடு அமைக்கும் முயற்சிகளைக் கட்டிவளர்க்கும்!

'ஸ்ரீலங்கா எதிரியின் மண்; அங்குள்ள பாராளுமன்றம் தமிழினத்தை அழித்துவரும் சதியாலோசனைக்கூடம்' என்ற உண்மைகள் தமிழர்கள் மனதில் இறுக்கமாகப் பதியட்டும்! புலியின் வாயிலிருந்து பறித்துக் கரியின் காலில் இடுவதால் தமிழினம் தப்பிவிட முடியாது என்ற உண்மை தமிழர் உள்ளங்களில் உறுதியாகட்டும்!

## சிரிக்கவும் சிந்திக்கவும்

ஈழத்தில் இருந்து உயர் கல்வி பெறுவதற்காகச் சாதியால், பணத்தால், அந்தஸ்தால் மதிக்கப்பட்டதென்று தமிழன் நம்புகின்ற குடும்பமொன்றைச் சார்ந்த இளைஞன் ஒருவர் லண்டன் வந்தார்! படிப்போடு பறந்தடித்து உடலை வருத்தி உறக்கமின்றிப் பணம்சேர்க்கும் பிற இளைஞர்களைக் கண்டார் அவர்! உள்ளம் துடிதுடித்தது பணம் சேர்க்கவும், உழைக்கவும்! அலைந்தார் வேலையொன்று தேடி! பல காரியாலய, தொழிற்சாலை வாசல்களில் ஏறியிறங்கிய பொழுது இங்கிலாந்தில் இன்று 10 லட்சம் பேர் வேலையற்றிருக்கும் உண்மை புரிந்தது அவருக்கு! இருந்தும், தமிழனுக்குரிய விடாமுயற்சி அவருக்கும் இருந்ததால் வைத்தியசாலை ஒன்றில் உதவித்தாதித் தொழில் கிடைத்தது. ஆங்கிலேயனின் வேலை ஒழுங்கைப்பற்றித் தம் பெற்றோரிடம் அறிந்திருந்தார் போலும்; விநாடி தாமதிக்காமல் வேலைக்குச் சென்றார் ஆரம்பநாள். மகத்துவம் வாய்ந்த மனிதசேவையொன்று செய்யப் போவதாக அவர் உணர்ந்து வைத்தியசாலைக்குப் போகவில்லை.. பணம் அவர் பிரச்சனை! தொழில் எப்படியிருந்தாலும் அவருக்குத்திருப்திதான், பணம்நிரம்பி வந்தால் போதும். ஆதலால் தொழிலின் மகிமையை எண்ணவும் அவர் மனதில் இடமிருக்கவில்லை.

ஊனர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையாதலால் அவர்களினது மலசல விடயங்களையும் கவனிக்கவேண்டி இருந்தது அவருக்கு! எப்படியோ, பணம் வேண்டுமென்றால் தன்னை மறக்கவேண்டித்தான் இருந்தது. அவ்விடத்தில் வாலிபமிடுக்கெல்லாவற்றையும் பணமாயை மறைத்துக் கொண்டது அவருக்கு மிகவும் உதவியாகிவிட்டது. தொழிலை விரும்பியோ, விரும்பாமலோ, முதல்நாள் வேதனம் நிச்சயமாகிவிட்டது. இருப்பிடம் திரும்பியவருக்கு செய்ததை மறைக்கவும் விருப்பமில்லை! பல ஈழத்து நண்பர்கள் செய்வதைக் கூறுமளவும் விடமனமில்லை! அவருடன் அறையைப் பகிர்பவருக்குக் கூறியவை சிரிப்பிற்கும் சிந்தனைக்கும் உரியவை!

"...அண்ணை. எங்கட ஊரில் மலசலகூடத் தொழில் செய்தால் பறையன் என்றும், தோட்டி என்றும் முத்திரையிட்டு இழிவாகக் கருதுவார்கள். இங்கு நாங்களும்தானே செய்கிறோம்! என்னசெய்வது? பணத்திற்காகச் செய்யவேண்டியிருக்கிறது!"

• • • •

பணத்திற்காகவும் உழைப்பிற்காகவும் ஆற்றிய தொழில் யாவும் சாதிக்குரியனவாகிய விந்தைகளைப் பகுத்தறிவுள்ள தமிழன் உணரத் தயங்குவதேன்? உணர்ந்தும் திருந்தப் பின்வாங்குவதேன்?? உண்மைகளை நிலைநாட்டிட வலிமையுள்ள புரட்சி உள்ளங்கள் முன்வரவேண்டும்! இதுவே ஒருவழி, தமிழன் ஒன்றுபட!!!

 www.tamilarangam.net 

# யாரை ஏமாற்றுகிறார்கள்?

1971ம் ஆண்டு சித்திரை மாதம் 4ம் தேதி இலங்கையில் 'ஜாதிக விமுக்திப் பெரமுனை'யால் தொடங்கப்பட்ட புரட்சி முறியடிக்கப்பட்டதுபற்றிய ஆய்வாளர்களின் பலமான கருத்துக்களில் ஒன்று, தமிழர்களையும் இப்புரட்சியில் கலந்துகொள்ள வைக்காமை என்பதாகும்! காரணம், புரட்சியைப் பற்றிய உண்மைகள் யாவும் திட்டமிட்டு தமிழர்களிடம் மறைக்கப் பட்டதேயாகும்! இது பற்றி ஆயவேண்டியதொரு முக்கிய கட்டம் இன்று லண்டவில் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் உலக சகோதரத்துவக் கண்ணோட்டத்தில், மார்க்ஸியக் கருத்துக்களையெடுத்து முன்செல்பவர்கள் என்று தம்மைத்தாமே கூறிக்கொள்ளும் சிலர், தமிழ்மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வை ஒற்றுமையை, எழுச்சியை திட்டமிட்டுக் குலைத்துவிடச் செய்யும் சதிகளைப், பொய்ப்பிரசாரங்களை மக்களுக்கு எடுத்துக்காட்டவேண்டிய நிலை ஈழ விடுதலைக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு ஒரு சோசலிச ஈழ அரசு அமைப்பதில் ஈழ விடுதலை முன்னணி இறுக்கமான நம்பிக்கை வைத்துள்ளது. ஆனால், சோசலிசம் என்கின்ற போர்வையில் தம்மை மறைத்துக்கொண்டு, வட—தென் வியட்நாமைத் தங்கள் விவாதத்திற்கு இழுத்து, இலங்கையிலும் ஒரு இணைப்பு ஆட்சியை ஏற்படுத்த முடியும் என்று, தமிழர்களிடம் நம்பிக்கையூட்டத் துடிதுடிக்கிறார்கள் சில சிங்கள ஏகாதிபத்தியத்தின் கையாட்கள்! 30 வருடங்களாகப் போராடிய வீரவியட்நாமின் யுத்தத்தால் கிடைத்த படிப்பினைகள் எமது ஈழத்தை உருவாக்குவதற்கு அவசியமெனினும் வியட்நாமில் ஏற்படுவதுபோல் ஓர் வட—தென் இணைப்பு இலங்கையில் என்றும் ஏற்படமுடியாது. காரணம், வியட்நாம் மக்களைப்போல் இலங்கையர்கள் யாவரும் இனத்தால், மொழியால், கலையால், பண்பாட்டால் ஒன்றானவர்கள் அல்லர்!

உண்மை இப்படியிருக்க, நசுக்கப்படும் தமிழினம் சிங்கள ஏகாதிபத்தியத்துடனும், முதலாளித்துவத்தோடும், போராடி, வடவியட்நாம் விடுதலை பெற்றதுபோல் தமிழ்ப் பகுதிகளை விடுதலை செய்யவேண்டும்; பின் அதே சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடும் சிங்கள முற்போக்குச் சக்திகளுக்கு உதவி, அவர்களையும் அவர்கள் பகுதிகளையும் விடுதலையடையச் செய்யவேண்டும்; பின்னர் இரண்டும் இணைந்து தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும்; இதனால் உலக சகோதரத்துவத்துக்குப் பக்கபலம் அளிக்கவேண்டும் என்பதெல்லாம் எப்படிச் சாத்தியமாகும்???

அதுவுமன்றி, முழு இலங்கையிலும் சோசலிசம் காணத் துடிக்கின்றவர்கள், 71ம் ஆண்டு நடந்த சிங்கள சோசலிசப் புரட்சியை மறந்துவிடக்கூடாது; மறைத்து விடவும் முடியாது! இலங்கை முழுவதற்கும் புரட்சிகரமான சோசலிச அரசை நிறுவும் போராட்டத்தில் தமிழ் மக்களை இணைக்கவில்லை; இது மறுக்கமுடியாத உண்மை. இது தமிழ்மக்களிடம் கொண்ட நம்பிக்கையா? அல்லது, நம்பிக்கையீனமா?

நம்பிக்கைகொண்டிருந்தால், முழுத் தமிழினத்தையும் தொழிலாளி வர்க்கமாக ஏற்று, சோசலிஸ்டுக்களென நம்பி, போராட்டத்துக்குத் தயார்படுத்தியிருப்பார்கள்!

நம்பிக்கையீனமாயின், சோசலிச மனப்பான்மையுள்ள தமிழ்த் தொழிலாளரே கிடையாது; அல்லது தமிழ் முதலாளிகளை அழிக்க தமிழ்த் தொழிலாளர்கள் முன்வரமாட்டார்கள்; அன்றேல், தமிழர்கள் அரசாங்கத்தின் உளவாளிகளாகச் செயற்பட்டுவிட்டால் புரட்சி முறியடிக்கப்பட்டுவிடும் என்ற முடிவிற்கு வந்திருக்க வேண்டும்!

அப்படியுமில்லையாயின் ஆயுதப்புரட்சியைச் சிங்களவர்களே ஆற்றிவிட்டால் முழுத் தமிழினத்தின் தலைவிதியையும் சிங்களவர்கள் துப்பாக்கி முனையில் நிர்ணயிக்கும் வாய்ப்பு கிடைத்துவிடும், இதனால் தமிழர் பிரச்சனைக்கு இறுதியான முடிவை எடுப்பது சுலபமாகிவிடும், அல்லது தமிழர் யாவரும் முதலாளிகள்; அவர்களை வேரோடு அழித்தால்தான் இலங்கையில் உண்மையான சோசலிசம் தோன்றும் என்ற முடிவாகத்தான் இருக்கவேண்டும்! இதில் எது உண்மை என்று தெரிந்துகொள்வதில் சிரமம் இருக்காது, தமிழர்கட்கு!

ஆனால், இவை இவ்வாறு நடந்தபின்னும், தேசிய சோசலிச அரசை ஸ்தாபிக்க, தமிழ்ப் பகுதியையும் சிங்கள பகுதியையும் தனித்தனியாக விடுதலைசெய்து இணைக்கத்துடிக்கும் மோசடிகள், தமிழ்மக்கள் மத்தியில் தம் கருத்தைப் புகுத்திவிடலாம் என்று தமது காலத்தையும் வீணக்குவதுதான் நகைப்புக்குரியது.

அத்தோடு அவர்கள் கூறும், பிரிந்தும்—இணைந்தும் போராடுவது பற்றியவைகளை தனிக்கனியே ஆராய்ந்தால் அவர்கள் புத்தியில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது என்ற முடிவிற்கு இலகுவாக வந்துவிடலாம்.

அவர்கள் கூற்றுப்படி 'தமிழ்த் தொழிலாளி வர்க்கத்தையும் சிங்களத் தொழிலாளி வர்க்கத்தையும் நசுக்குகின்ற சிங்கள—தமிழ் முதலாளித்துவ வர்க்கம் ஒழிக்கப்படவேண்டும்; முதலில் தமிழ்த் தொழிலாளர்கள் விடுதலைபெறவேண்டும்; அப்போராட்டத்துக்குத் தங்களைத் தாங்களே தயார்படுத்தவேண்டும்; அவர்கள் தமிழ்—சிங்கள முதலாளித்துவக் கும்பலை முறியடிக்கவேண்டும்!'

இதில் யாரை முதலில் அழிப்பது? யாரை அழித்தாலும் சிங்களத் தொழிலாளி வர்க்கம் தமிழ்த் தொழிலாளிகளின் போராட்டத்துக்குக் கைகொடுத்து உதவாது! சிங்கள முதலாளி வர்க்கத்தை எதிர்க்கின்றபோது முதலாளி யார் தொழிலாளி யார் என்று அடையாளம் கண்டு கொள்ள வேண்டியது தமிழ்த் தொழிலாளிகளின் பொறுப்பு. சிங்கள முதலாளிகளை அழிக்கும் தமிழ்த் தொழிலாளிகளை சிங்களத் தொழிலாளி வர்க்கம் ஏற்றுக்கொள்ளும் எனக்கொண்டால் தமிழ்த் தொழிலாளி வர்க்கத்தைச் சந்தேகமின்றிச் சிங்களவர் அடையாளம் கண்டுகொண்டிருக்க வேண்டும். ஆரம்பத்திலேயே இருபக்கத்தினரும் சேர்ந்து புரட்சிக்குத் தயார் படுத்தாதுவிடின் இறுதியில் ஒருவரையொருவர் அடையாளம் காணமுடியாது என்பது ஈழ விடுதலை முன்னணியின் முடிவு! ஆனால் தனித்தனியாக இயங்கி இறுதியில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு புரட்சி செய்யலாம் என்பது சிலரது கனவுலகக் கருத்துக்கள். இதை, அரசியல் சதிகளை புரிந்துகொள்ள முடியாத அப்பாவித் தமிழர்கள், நம்ப வேண்டும்; அது அவர்கள் தலைவிதி!

அடுத்து, இருபகுதிகளும் தனித்தனியாக புரட்சிக்கு ஆயத்தம்செய்து புரட்சிச் சமயத்தில் இணைவது பற்றிய முடிவை ஆராய்ந்தால், இருபகுதிகளிலும், இறுதியில் இணையப் போகிறோம் என்ற உண்மையாவது தெரிந்திருக்க வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் இணைவதைப் பற்றிச் சிலர் கூறி வைக்கலாம்; சிங்களப் பகுதியில் இணைவதுபற்றிக் கூறப்படும் என்பதைத் தெய்வவாக்காகத் தமிழர் ஏற்க வேண்டும்! ஆனால், அப்படி இந்த இணைப்பு ஏற்படலாம் எனக் கற்பனை செய்தால், இதை மக்கள் தமக்குள் ஏற்படுத்துவார்களா, அல்லது புரட்சியை முன்னெடுத்துச் செல்பவர்கள் தமக்குள் ஏற்படுத்திக்கொண்டு மக்களை இணையும்படி கட்டாயப்படுத்துவார்களா என்பதை இக் கருத்தைக் கூறுபவர்களிடமே கேட்கவேண்டும்! தலைவர்கள் சொன்னதும் மக்கள் அதை உடனே ஏற்றுக் கொண்டுவிடுவார்கள் என்று கூறினால், 58ம் ஆண்டுக் கலவரத்தையும் பண்டா—செல்வா

(7ம் பக்கம் பார்க்க...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழினமே!

(இடமின்மை காரணமாக சென்றமாத 'ஈழவிடுதலை'யில் வெளியாகியிருக்க வேண்டிய "ஈழத் தமிழினமே" என்னும் தொடர் கட்டுரை முழுமையாக இடம்பெறவில்லை. நம்மிடையே பரந்துள்ள ஜாதிப் பிணியையும், ஈழ விடுதலை முன்னணியின் வளர்ச்சிகண்டு வயிறு எரிபவர்களைப் பற்றியும் எழுதப்பட்டிருந்த இக்கட்டுரையின் சென்ற மாதத் தொடர்ச்சி இம்மாத ஈழவிடுதலையில் இடம்பெறுகிறது. ஈழத் தமிழர்களாகிய எம்மிடையே வேரூன்றியிருக்கும் பிற்போக்குச் சக்திகளைக் களைந்து எறியவேண்டும்; எமக்கென ஓர் சோசலிச ஈழ அரசை அமைக்க வேண்டும் எனும் முன்னணியின் அடிப்படைக் கொள்கையோடு எழுதப்படும் இக்கட்டுரை, புதிய அம்சங்களோடு முழுக் கட்டுரையாக அடுத்த இதழில் வெளிவரும் எனத் தெரிவிக்கிறது, ஈழ விடுதலை.)

## காலத்துக் கேற்ற மாறுதல்

நமக்குள்ளே இருக்கும் இந்த ஜாதிப் பிரச்சனை காலப்போக்கில் தீர்ந்துவிடும்; நமக்குத் தனிநாடு கிடைத்தால் இது ஓய்ந்துவிடும் என்று சில சமயங்களில் சமாதானம் வேறு சொல்லிக் கொள்ளுகின்றாய் நீ! காலப் போக்கில் தீரக்கூடிய பிரச்சனையா இது? அப்படியாயிருந்தால் என்றோ தீர்ந்திருக்கவேண்டுமே இந்தப் பிரச்சனை! மாறாக நாளுக்குநாள் வளர்ந்து கொண்டல்லவா இருக்கின்றது! காலத்தோடுசேர்ந்து உன் வாழ்நாட்களும் ஓடுகின்றனவே. என்றோ ஒருநாள் நடைபெறப் போகின்றது என எதிர் பார்த்துக் கொண்டிராமல் இன்றே, இப்பொழுதே, இந்தப் பிரச்சனைக்கு முடிவெடுத்தாக வேண்டும் எனும் ரீதியில் செயல்பட ஏன் தயங்குகின்றாய்? காலத்துக்கேற்ற மாறுதல்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் உன்னிடம்! அந்தக் காலத்தில், ஆலய உச்சியில் அகல் விளக்கை ஏற்றிவைத்தாய்! இப்பொழுதோ மின்சாரவிளக்கைப் பூட்டுகின்றாய். கால்நடையாகக் கால் ஓயுமட்டும் நடந்து வேண்டிய இடங்களுக்குப் போய்வந்தாய் அக்காலத்தில்! கண்மூடிக் கண் திறப்பதற்குள் அயிரமாயிரம் மைல்களைத் தாண்டி விடுகின்றாய், விஞ்ஞான யுகமான இந்தக் காலத்தில். இது போல வாழ்க்கை நடைமுறைகளில் உன்னிடம் பல மாற்றங்கள், காலப் போக்கில், ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. ஆனால் ஜாதியெனும் பிணிநோய் தான் உன்னை விட்டகல மறுக்கின்றது. அதை மாற்றக் காலத்திடம் சக்தியில்லை. மருந்து உன் கையில்தான் இருக்கின்றது; அதாவது உன் மூளையிலிருக்கின்றது. அந்த சிந்தனை மருந்தைக் குடித்து உன் பெரும்பிணியான ஜாதி நோயை அகற்றத் தவறிவிட்டாயானால் ஈழத் தமிழர்களுக்காகத் தனிநாடு வேண்டுமெனக் கேட்கும் உன் உரிமைக்குரல் வெறும் ஊமைக் கூப்பாடாகவே சென்றடைந்துவிடும்!

சிங்கள ஏகாதிபத்தியத்திடமும், கொடுங்கோன்மை ஆட்சியிடமும் இருந்து இலங்கைவாழ் தமிழர்களை விடுவித்து அவர்களுக்கென ஒரு சோசலிச ஈழ அரசை அமைக்கும் தலையாய நோக்கத்துக்காக லண்டனில் ஈழ விடுதலை முன்னணி எனும் அரசியல் இயக்கம் இயங்கிவருவது நீ அறிந்ததே! சோசலிசக் கருத்துக்களை உடைய ஒரு ஈழ அரசை அமைப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஈழ விடுதலை முன்னணியினரின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, ஈழத்தில் தாண்டவமாடும் ஜாதி பேயைப் பூராவாக விரட்ட வேண்டும் என்பதும்! ஜாதி எனும் நம்மிடையே உள்ள இக் கொடிய அரக்கனுடன் எந்நேரமும் நாம் போராட்டம் நடத்திக் கொண்டே இருக்கவேண்டும். கணப்பொழுதும் சளைத்துவிடக் கூடாது!

## அந்நிய நாடுகளில் அனாதை வாழ்வு

மேல்நாடு வாழ் ஈழத்தமிழினமே! உன் உள்மனதில் உள்ள ஜாதி அரக்கனுடன் போராடி, வெற்றிபெற்றதும், ஈழ விடுதலை முன்னணியில் ஒன்றாகவிணைந்து ஈழ விடுதலைப் போராட்டத்துக்கான, உன் பங்கைச் செய்யத் தயங்காதே!! மூவரசர் காலத்திலே சீருடனும், சிறப்புடனும் சுதந்திர பூமியாக எங்கள் ஈழநாடும் விளங்கியது. தனிநாடு இல்லா ஈழத் தமிழினம் நாம், இன்று எமக்குள்ளே ஒற்றுமையின்றி, உரிமை பறிக்கப்பட்டு, கடமை உணர்வின்றி, கண்ணியத்தையே மறந்து, கட்டுப்பாடு குலைந்து அநாதைகள்போல அந்நிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமே! இந்த நிலை நிச்சயம் மாறவேண்டும். எப்பொழுது மாறும்? நமக்குத் தனிநாடு கிடைக்கும் பொழுது! எப்படித் தனிநாடு கிடைக்கும்? நமக்குள் ஒற்றுமை பெருகி அந்த ஒற்றுமையால் ஓங்கும், நம் உரிமைக் குரலின் எதிரொலி உலகெங்கும் பரவும் பொழுது! ஒற்றுமை எங்கு தோன்றும்? ஜாதிபேதமற்ற ஒரு சகோதரத்துவ சமுதாயத்தில்தான்.

டைடைடைடைடைடைடை

## உளுத்த தூண்கள் உடைக்கப்படவேண்டும்

ஈழத் தமிழினமே! ஈழ விடுதலை முன்னணி என்னும் இந்த இயக்கத்தில் வயதான அறிவாளிகள் யாரும் இல்லை; பெரிய பட்டதாரிகள் இல்லை; இளைஞர்கள்தானே இருக்கின்றார்கள் என்றுகூட உன்வாயில் இருந்து சில சமயங்களில் ஊமைக் குற்றச் சாட்டுக்கள் வெளிவந்திருக்கின்றனவே! இயக்க நடவடிக்கைகளையும் இயக்க அங்கத்தவர்கள் யார் யார் என்பதைப் பற்றியும், இயக்கத்தின் நோக்கங்களைச் சிரமேற் கொண்டு எத்தனை வயதிலும் அறிவிலும் நிறைந்த பெரியவர்கள் உண்மையாக உழைக்கின்றார்கள் என்பதைப் பற்றியும் அறியாமல் மேலெழுந்தவாரியாக வம்பு பேச நினைக்கின்றாயே!!! சரி; இளைஞர்கள்தான் கூடியளவில் அங்கத்தவர்களாக இருக்கின்றார்கள் என்றே வைத்துக் கொள்வோம். நல்ல கருத்துக்களை எடுத்துக்கூறி நாட்டுப் பணியில் ஈடுபட அவர்களுக்குத்தானே வாய்ப்பும் வசதியும் அதிகம் இருக்கின்றது!! அன்பும் அறமும் அறிந்து, உண்மையை உணர்ந்து, தன்னலத்தைத் தகர்த்தெறிந்து, பொதுநலத்துக்குப் பாடுபட்டு, நாட்டை அமைத்து, மக்களை உரிமையுடன் வாழ்வதற்குப் பாடுபடும் போராட்டத்தில், தீவிரமாக இறங்கியிருக்கும் இளைஞர்களுக்கு உற்சாகம் ஊட்டி உனது பணியையும் திறம்படச் செய்வதை விட்டுவிட்டு புத்தி பேதலித்தவனைப் போல் பிதற்றுகின்றாயே! நல்ல கருத்துக்களைச் சொல்லி நல்லசெயல்களைச் செய்பவர்கள் முட்டாள்களாக இருந்தாலும் சரி; எதிரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் சொல்லையும், செயலையும் சிந்திக்கும் திறனுள்ளவனும் நிச்சயம் ஏற்றுக் கொள்வான். இந்த அடிப்படை உண்மையை உன் அடி மனதுக்குள் புதைத்து, பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்ற படிப்பாளர் மனதில்தான் தத்துவங்கள் தோன்றும் என எதிர்பார்க்கும் உன் கூற்றைக் கேட்டால் குன்றுகளே கைகொட்டி நகைக்கும். பிறக்கும்போது எவருமே தத்துவங்களோடு பிறக்கவில்லை, அறிஞர்களாகவும் தோன்றவில்லை. வாழ்க்கை நடைமுறைகளும் துன்பங்களும் அவர்களைத் தத்துவவாதிகளாக்கின; உலக அனுபவமும், எதையுமே அறிந்துகொள்வதற்குரிய பகுத்தறிவும் அவர்களை அறிஞர்களாக்கின. இது நீ அறியாததா? அல்லது கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் உழுத்துவிட்டால் அவற்றை இடித்துவிட்டு புதிய பலமுள்ள தூண்களை அமைக்கும் உலக வழக்கத்தையே மறந்துவிட்டாயா?

## காய்ந்து போன சருகுகளே

கிரேக்கநகர வீதிகளில் நின்று அறைகூவிய 'சாக்ரடீஸ்' என்ன கூறினார் என்று தெரியுமா உனக்கு? "இளைஞர்களே! நாளைய நம்நாட்டு இளந்தளிர்

(எதிர்ப் பக்கம் பார்க்க...)

**தனிநாடு நிறுவப்படும்வரை**

www.tamilarangam.net 

...களே!" என்றுதான் அழைத்தானே தவிர "காய்ந்துபோன சருகுகளே!" என்று அழைக்கவில்லை. சமுதாய வானில் நட்சத்திரங்களாக ஜொலிக்கும் இளம் முறுக்கேறிய வாலிபர்களையழைத்த சாக்ரடீஸ், "உங்களுக்காக இந்த வாழ்க்கை மைதானம் பரந்து கிடக்கின்றது; அதில் திறமையாக விளையாடி வெற்றிபெறுங்கள்; அதற்குரிய மனோபலமும், உடல்பலமும் இளைஞர்களாகிய உங்களிடம்தான் உள்ளது; வருங்காலத்தையும் வளர்ந்துவரும் சமுதாயத்தையும் செழிப்பாக்க உங்களால்தான் முடியும்" என்றும், சிந்தனை என்றும், சிறுதுரும்பை அவர்களுக்கு அள்ளிவீசினான்.

'எந்த ஒரு நாட்டின் புரட்சிக்கும் அடிகோலியது இளைய சமுதாயமே' என்பது யாவரும் மறக்கமுடியாத ஒரு மாபெரும் உண்மை. தனிநாடு கோரி உரிமைப் போராட்டம் நடத்துவதற்குத் தயாராகியுள்ள நாம் எமது போராட்டத்தை ஒரு வழியில்மட்டும் நடத்தாது, எந்தெந்த வழிகளிலெல்லாம் சென்றால் வெற்றி கிடைக்குமோ, அந்தந்த வழிகளிலெல்லாம் போராட்டம் நடத்தவேண்டும். இந்தப் போராட்டங்களுக்கு உலகப் பொறுப்புக்களும், குடும்பப் பொறுப்புக்களும் குறைந்த அளவில் இருக்கும் இளைஞர்களே, நிறைந்த அளவில் பங்குபற்றியாக வேண்டும்! இது ஓர் மறைக்கமுடியாத தத்துவம். ஆகவே வயதில் பெரியவர்கள், அறிவில் பெரியவர்கள், நேரடியாகவந்து தங்களை அடையாளம் காண்பிக்கத் தயங்குபவர்கள் அனைவரும், இளைஞர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து; 'இளைஞர்களுடன் சேர்ந்தால் எங்கள் கௌரவம்—தராதரம் என்னவாகும்' என்ற போலிப் பகட்டை விடுத்து, தங்களால் இயன்ற பணிகளைப் பூரிப்புடன் செய்யவேண்டும்.

ஈழத் தமிழினமே! எந்த ஒரு இயக்கத்துக்கும் ஆள் பலத்துடன் பணபலமும் வேண்டும்; இது நீ அறியாததல்ல! இதை மனதிற்கொண்டு,

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்! ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!
எதுவும் அற்ற இங்கெவ் வகையானும் இப்பெரும் தொழில் நாட்டுவோம் வாரீர்!!"

என்ற பாரதியின் வேண்டுகோளைத் தமது தலையாய வேண்டுகோளாக விடுத்திருக்கும் ஈழ விடுதலை முன்னணியினருடன் சேர்ந்து பணியாற்றுவது உனது கடமையும் எனது கடமையும் அல்லவா??? இந்த அரிய கடமையில் இருந்து சற்றேனும் வழுவிடாதே என்று எடுத்துக்கூறி, உன்னிடம் உரிமை கேட்கிறேன்.

— உன்னோடு ஈழத்தில் பிறந்தவன்

# சிறையில் வாடும் மாணவர் பேரவையினரை விடுதலை செய்!

குற்றவாளியாயின் தண்டிக்கப்பட வேண்டும்! குற்றங்களை நிரூபிக்கமுடியாது விட்டால், யாரும் அதற்காக எந்தச் சிறு தண்டனையும் அனுபவிப்பது சர்வாதிகாரமானது; பலாத்காரம் நிறைந்தது!

அப்படியாயின் கடந்த மூன்றுண்டு காலமாகக் கொடிய சிங்கள அரசின் ஆட்சியின்கீழ் சிறையில் வாடும் தமிழ் மாணவர்பேரவை உறுப்பினர்களான பொ. சத்தியசீலன், பொ. திசைவீரசிங்கம், என். அமரசிங்கம், ஞா. ஞானசேகரம், பி. நடேசானந்தம் முதலியவர்கள் நீதிவிசாரணைக்கு உட்படுத்தப்படாது சிறைச்சாலைக்கு இரையெனவிட்டு கண்மூடி இருப்பது தமிழினத்தின் நன்றிப்பெருமிதமா???

தமிழினமே! உன் இனவிடுதலைக்கும் எதிர்காலத்திற்குமாக சரியான பாதைகாட்டிய அவ் உண்மை உள்ளங்களை விடுதலை செய்யும்படி உன் போர்க்கொடியை உயர்த்து!

இதைச் செய்யக் காலதாமதம் செய்கின்ற தமிழர் கூட்டணியினரைப் பலவந்தப்படுத்து!!!

## சிவகுமாரா! சிலையாய் விடுதலைப் பறைசாற்று!

தமிழினம் ஈழத்தை அமைப்பதற்கான விடுதலைப் போராட்டத்துக்கு அத்தியாவசியமான இனவொற்றுமை, இன்மை கண்டு பரிதவித்த பிறவி அது!

தமிழினத்தின் ஒற்றுமைக்காக சமூகத்தில் சமத்துவத்தை நிலைநாட்டச் சமபந்தி போசனங்கள் செய்து மனிதகுல மாண்பை எடுத்துப்படிப்பித்த பக்குவம் அடைந்த உள்ளம் அவனுடையது!

கட்டிவளர்க்கப் பாடுபடும் வேளையில், இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிறுவளர்த்த எட்டப்பர் கூட்டம் கண்டு, கொதித்தெழுந்து அவர்களை அழித்தொழித்து இன ஒற்றுமையைப் பேணப் பறந்தடித்த உள்ளம் அவனுடையது!

கொதித்த உள்ளத்தில் கோல் பாய்ச்சிய கொடுங்கோல் ஆட்சியினரின் கூலிப்படைகள் தமிழினத்தில்செய்த கொடுமைகளைத் தாங்கொணது அவர்களைக் கொன்றுகுவிக்கப் புறப்பட்ட வீர உள்ளம் அவனுடையது!

அரசியல்நிலை தெரியாது, வாழ்வின் எதிர்காலம் புரியாது வாழ்ந்த 'தமிழ் உள்ளங்களைத் தட்டி எழுப்ப முடியுமோ' என்ற ஏக்கத்தில் தவியாய்த் தவித்தலைந்த உள்ளமும், உடலும் அவனுக்கே உரியவை!

தன்னந்தனியாக நின்றென்கிலும் தாழ்வடைந்த தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்குப் பாதை காட்டிவிடலாம் என்று துடியாய்த் துடித்தவனுக்குக் கிடைத்த பரிசுகளோ சிறைச்சாலை வாழ்வு; சிறைக் கொடுமைகள்; சித்திரவதை!

இறுதியாக, தன்னுயிரை ஈந்து தமிழினத்தின் தூக்கத்தைக் கலைத்தவனின் இலட்சியங்களை நாளாந்தம் தமிழினம் நினைவுபடுத்த வேண்டுமென்பதற்காக, சிலையாய் நின்று பறைசாற்ற வைத்தவர்களுக்கு ஈழ விடுதலை முன்னணி தலைசாய்க்கிறது!

# தமிழினம் ஓயாது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வைகாசியில்

# ஈழ விடுதலை முன்னணி

சென்ற (வைகாசி) மாதத்திய 'ஈழவிடுதலை' சித்திரை மாதத்தில் ஈழவிடுதலை முன்னணியின் செயல்கள்பற்றி எழுதியிருந்தது. காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற மதிப்புக்குரிய திரு ஹரால்ட் வில்சனிடம் மகஜர் சமர்ப்பிக்கும் முகமாக முன்னணி லண்டனில் ஏற்பாடுசெய்த எதிர்ப்பு ஊர்வலம், சித்திரைமாதத்து சிறப்பம்சமாக அமைந்திருந்தது. அமைதிக்குப் பங்கம் விளைவிக்காது இங்கிலாந்து நாட்டின் சட்டதிட்டங்களுக்குட் பட்டு சித்திரை மாதத்தில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய ஈழ விடுதலை முன்னணி, சிங்களவர்களது அமைதியைக் குலைத்து இங்கிலாந்து நாட்டின் சட்டதிட்டங்களைப் புறக்கணித்து ஈழத்தின் விடுதலைப் போரின் முதற்படியில் கால்வைத்தது வைகாசிமாதத்தில் என்றால் மிகையாகாது!

சென்றமாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கோப்பை கிரிக்கட் ஆட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இலங்கையில் இருந்து சிங்களக் கிரிக்கட் குழு ஒன்றும் வந்திருந்தது அனைவரும் அறிந்ததே! இலங்கையைப் பிரதிபலித்த இக்குழு ஆடிய மூன்று பந்தயங்களிலும் எந்தவொரு தமிழனுக்கும் இடம்தரப்படவில்லை. 'சிங்களவர்களுடைய நாடு ஸ்ரீலங்கா; அங்கு தமிழர்கள் என்ற ஒரு சாரார் வசித்தால், அவர்கள் இந்தியாவில் இருந்து ஆங்கிலேயர்களால் இறக்குமதி செய்யப்பட்டு மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களாக வேலை செய்கிறார்கள்' என்றதொரு அப்பட்டமான பொய்யைக், காமன்வெல்த் இன்ஸ்டிட்யூட்டில் வைத்துள்ள ஸ்ரீ லங்காவுக்கு உரிய பொருட்காட்சியில் விபரித்திருப்பதை, உலக மக்களிடம் பிரதிபலித்து அனைவர் கண்ணிலும் மண்ணைத்தூவ சிங்கள அரசாங்கம் எடுத்துக்கொண்ட மாபெரும் முயற்சியே! திறமையுள்ள விளையாட்டு வீரர்கள் தமிழர்களிடத்தே இருக்க, சிங்களவர்கள் என்ற ஒரேஒரு காரணத்துக்காக, சில கத்துக்குட்டிகளை இங்கு அனுப்பிவைத்தது அம்மையாரின் அரசாங்கம். ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் தற்போதைய கிரிக்கட் குழுவினது முக்கிய ஆட்டக்காரர்களில் ஒருவரான கஜன் பத்மநாதனுக்கு, ஸ்ரீலங்கா குழுவில் இடமிருக்கவில்லை! சென்றவருடம்வரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கிரிக்கட்குழுவில் மிகத்திறமையாக ஆடி தனக்கென்னொரு பெயரைச் சம்பாதித்த மனோ பொன்னையாவுக்கும் இக்குழுவில் இடமில்லை! இன்னும் எஸ். எஸ். குமார், ஜெகநாதன், இராமநாதன், டாக். பாலகிருஷ்ணன் முதலிய பலருக்கும் இக்குழுவில் இடமில்லை! மொழி, நிலம், தொழில், கல்வி ஆகியவற்றில்தான் தமிழர்களைப் புறக்கணிக்கிறோம் என்பதல்ல; விளையாட்டுத்துறையிலும் அவர்கள்கதி அதோகதிதான்' என்று தம்பட்டம் அடிப்பதுபோன்ற இக்கொடூரச் செய்கையைக்கண்டு குமுறாத தமிழ் நெஞ்சங்களே இருக்காது!

இன—நிற வேறுபாட்டுக் கொள்கைகளை விளையாட்டுத் துறையிலும் புகுத்திய தென்னாபிரிக்கா இன்று உலகநாடுகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டு உலக விளையாட்டுப் போட்டிகளெதிலும் கலந்துகொள்ள முடியாதபடி தவிக்கிறது. இன—நிற வேறுபாட்டுடன் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தென்னாபிரிக்க விளையாட்டுக்குழு இங்கிலாந்துக்கு 1970ம் ஆண்டு வந்திருந்தபொழுது அக்குழுவுடன் உலகநாடுகளெதுவும் ஆடக்கூடாது என்ற மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள், மனிதாபிமானமுள்ள பல்லாயிரக்கணக்கானோர்! அக்குழுவைப் பின்தொடர்ந்துசென்று, எதிர்ப்புக் கோசங்களையெழுப்பி, ஆட்டத்தை நடக்கவிடாதபடிதடுத்து, போலீசாரின் மிரட்டல்களுக்கு அஞ்சாது மைதானத்துக்குள் ஓடி உலகநாடுகளுக்கு உண்மையை எடுத்துவிளக்கிய, இனப் பாரபட்சத்தை விரும்பாத, உண்மைநெஞ்சம் கொண்ட அந்த மக்களின்செயல் தென்னாபிரிக்காவினது கொடுமையை தெரிந்துகொள்ள வாய்ப்பளித்தது. இதே இனவடிப்படையில் ஒரு சிங்கள விளையாட்டுக் குழுவை அனுப்பி, தென்னாபிரிக்காவையே தோற்கடித்த இலங்கையரசின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முடிந்தால் ஆட்டத்தைத் தடுத்து நிறுத்தி, அதன்மூலம் உலகமக்களுக்கு உண்மையை உணரவைக்கவேண்டும் என்ற திட்டத்தை ஈழ விடுதலை முன்னணிச் செயற்குழு தயாரித்திருந்தது. அத்திட்டத்தின் முதற்படியாக சென்றமாத ஈழவிடுதலையில் 'பகிஷ்கரிப்போம்' என்ற தலைப்பின்கீழ் இங்கிலாந்துவாழ் தமிழ்மக்கள் அனைவரினதும் ஆதரவைக்கோரியது முன்னணி. திட்டத்தை முதலிலேயே தெரிவித்துவிட்டால் எதிரிகள் பலமடைந்து விடுவர் என்பதால் 'ஈழ விடுதலை முன்னணியும் தகுந்த முறையில் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கத் தவறாது எனக் குறிப்பிடுகிறது...' என்றுமட்டும் குறிப்பிட்டிருந்தது முன்னணி. இன்று நோக்கம் திட்டமாகி, திட்டம் செயலாகி, செயல் வளர்ச்சியை அளித்துள்ளதால் அதை ஈழத்தமிழர்களுடன் பகிர்ந்து கொள்கிறது முன்னணி.

கிரிக்கட் ஆட்டத்தை எதிர்ப்பதின் மூலம் இலங்கையரசின் அட்டூழியத்தை அம்பலமாக்கும் திட்டத்தை வெற்றியுடன் செய்துமுடிப்பதற்குரிய பலவழிகளிலும் இறங்கிய ஈழ விடுதலை முன்னணி, இதைப்போன்ற போராட்டங்களில் பங்குபற்றியவர்களினது ஆழமான அறிவுரைகளை நாடியது. 1970ல் நடந்த தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்புப்போராட்டத்தைத் திறம்படச்செய்து வெற்றியீட்டிய மாபெரும் இயக்கத்தின் தலைவராக இருந்த திரு. பீட்டர் கைன் Mr. PETER HAIN அவர்களை முன்னணியின் பிரதிநிதிகள் சந்தித்தனர். இங்கிலாந்தின் பெரும்கட்சிகளில் ஒன்றான 'லிபரல்' கட்சியின் இளைஞர்கள் தலைவரான திரு. பீட்டர் கைன், சிங்கள இனவெதிர்ப்புப் போராட்டத்தைத் திறம் படச் செய்வதற்கான பல அறிவுரைகளை முன்னணிக்கு வழங்கினார். அவரது அறிவுரைகளையும் கூட்டுச்சேர்த்த முன்னணியினர் மான்செஸ்டர் 'ஓல்ட் ரா·.பர்ட்' மைதானத்தில் மேற்கிந்திய குழுவுடன் நடைபெற்ற முதல் ஆட்டத்தை தடுத்துநிறுத்தி சிங்கள அரசின் எதேச்சாதிகார ஏகாதிபத்தியத்தை உலகறியச்செய்ய 50பேர்கொண்ட இளைஞர்—பெரியோர் குழுவுடன் இரு சிறிய பஸ்வண்டிகளிலும், இரு மோட்டார் வண்டிகளிலும் மான்செஸ்டர் சென்றனர். மைதானத்துக்குள்ளே ஓடி ஆட்டத்தைத் தடுத்துநிறுத்துவதற்காக எட்டு வீர இளைஞர்கள் தெரிவுசெய்யப் பட்டிருந்தனர். தலைவர்கள் என்று தம்மைத்தாமே சொல்லிக்கொள்ளும் சிலர் தொண்டர்களை ஏவிவிட்டு தாம் ஒளிந்துநின்று விடுவது போலல்லாமல் ஈழ விடுதலை முன்னணிச் செயற்குழுவின் அங்கத்தவர்களும் மைதானத்துக்குள் செல்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

மான்செஸ்டரில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகளைப்பற்றியும் எதற்காக இவைகள் செய்யப்படுகின்றன என்று உண்மைகளும் இங்கிலாந்தின் புதினப்பத்திரிகைகள் யாவற்றுக்கும் வானொலி—தொலைகாட்சி நிலையங்களுக்கும், இரகசியமாக, அறிவிக்கப்பட்டன. திட்டம் செயலாவதற்கு முன்னரேயே அதுபற்றிப் பகிரங்கமாக விளம்பரப்படுத்தக்கூடாது என்பதால் விடுதலை முன்னணியினர் ஒவ்வோர் நிறுவனங்களுக்கும் நேராகச்சென்று நிலைமை விளக்கினார்கள்! போதிய அத்தாட்சிகளும் அனுப்பிவைக்கப்பட்டன! இவைகளனைத்தையும் திறம்படச்செய்து, மான்செஸ்டர் சென்ற முன்னணியினர் திட்டமிட்டபடி மைதானவாசலில் எதிர்ப்பு அட்டைகளை தாங்கியவண்ணம் வரிசையாக நின்றனர். என்ன ஏது என கேட்டவர்களுக்கெல்லாம் உண்மைநிலைமை எடுத்து விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் கையளிக்கப்பட்டன! இது ஒருபுறமிருக்க, மைதானத்துக்குள் ஓடுவதற்குச் சென்ற எட்டு இளைஞர்களும் நுழைவுச்சீட்டுப் பெற்றுக்கொண்டு உள்ளே சென்று ஒன்றுமேயறியாத அப்பாவிகளைப் போல், நான்கு நான்கு பேராக இரு திக்குகளில் அமர்ந்தனர். ஆட்டம் ஆரம்பமாகியது. ஸ்ரீ லங்கா முதலில் துடுப்பெடுத்தாடினர். 10நிமிடங்கள் ஆகவில்லை; 2 விக்கட்டுகள் வீழ்ந்துவிட்டன! அடுத்ததாகத் துடுப்பெடுத்தாடுபவர் உள்ளே வந்தார். அவர் ஆட்டத்துக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்ட அதேவேளை திமுதிமுவென கம்பிவேலிகளைத் தாண்டி உள்ளே குதித்த ஈழ விடுதலை முன்னணியினர் மைதானத்துக்குள் புயலெனப் புகுந்தனர்! அவர்களது ஓட்டம் மைதான நடுவில் PITCH ல் சென்று படுக்கும்வரை ஓயவில்லை...

(8ம் பக்கம் பார்க்க....)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ வேண்டுமானால்...

1ம் பக்கத் தொடர்ச்சி....

ஆட்சிபுரியும் இனத்தின் நலனுக்காக உகண்டா, கென்யா, இலங்கை போன்ற நாடுகளில் பல நூற்றுக் கணக்கான ஆண்டுகள் குடியமர்ந்து அந் நாடுகளுக்காகவே உழைத்துக் கொண்டிருக்கும் மக்கள் நாடுகடத்தப்படலாமெனில் சில ஆண்டுகளாகக் கல்விபெற வந்து மேலை நாடுகளில் நிலைபெற்றுவிட்டவர்களைப்பற்றி அந்நிய நாடுகளும், அந்நாட்டு மக்களும் சிந்திப்பதற்கு இடமில்லாமலில்லை!

மேலைநாடுகள் அந்நிய நாட்டவரின் குடியேற்றத்தால் ஏற்பட்டுள்ள தமது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளின் விளைவுகள் இந்நாடுகளில் வாழும் அந்நிய நாட்டவர்களை எதிர்நோக்கும் பெரும் பிரச்சனைகளாகும். இதை இவர்கள் தாம் எப்படி தீர்த்துக் கொள்ளலாம் என்று சிந்திக்காமல் இருக்க முடியாது.

சிந்திக்க முடிந்தவர்களால் வாழமுடியாது என்பதல்ல! கல்வியறிவை வளர்த்து, அதனுல் கிடைத்த சிந்தனை சக்தியைக்கொண்டு தொழில் நுணுக்கங்களைப் பகிர்ந்து அதற்குக் கிடைக்கும் வேதனத்தின்மூலம் மேலை நாடுகளில் வாழ்க்கை நடத்துகின்ற அரை லட்சத்துக்கும் அதிகமாக தமிழர்கள் ஒன்று யோசிக்கவேண்டும்; வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு விற்பனைச் சந்தை அதிகமிருந்ததால் உற்பத்தியை அதிகமாக்கி அதிகலாபம் பெறும் நம்பிக்கை இருந்தது. அதிக கைத்தொழில் பண்ட உற்பத்திக்கு அதிக திறமையும் தொழில்நுணுக்கமும் தேவைப்பட்டது அந்நாடுகளுக்கு! தமது தேவையைப் பூர்த்தி செய்யும் சிந்தனைத்திறப் பற்றாக்குறை தம்நாட்டவர்களிடையே காணப்பட்டதால், பிறநாட்டவர்களை எதிர்பார்த்தனர்! தற்போது தத்தம்நாட்டு மக்களிடம் போதிய கல்வித்தரமும், சிந்தனைச் சக்தியும் பெறக்கூடியதாய் இருப்பது ஒரு புறமிருக்க, அவர்களின் பண்டவிற்பனவு வியாபாரச் சந்தைகள் குறைந்துவருவது அவர்களின் பெரும் புறபிரச்சனைகளில் ஒன்றாகும். அபரிமிதமான இலாபம், அல்லது சந்தைகளின் ஏகோபித்துவம் என்ற நாடுகளுக்கு இருந்த நிலை முற்றாக மாறிவிட்டது. இவ்வேளையில் 'மேலைத் தேயத்தவர்கள் எமது உழைப்பைச், சிந்தனையை எதிர்பார்க்கின்றார்களா? அவசியமா? பயன் கொடுக்குமா? என்னும் கேள்விகளைக் கேட்பது புத்திசாலித் தனமானது! இவைகளைக் கேட்பது, வருகின்ற சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்களை மேற்கொண்டு வாழ்வதற்கு எமக்கு அவசியமானது. தமிழர்களிடம் உள்ள கல்வித் தகமைகள் ஒருபோதும் உணவு போட்டுவிடாது. நேரடியாகப் பொருளாதார வளர்ச்சியில் கல்வித்தகமைகளைப் பாவிக்க இடமிருந்து, வசதிகளும் தென்பட்டால் வாழ்வு ஒரு பிரச்சனையாக என்றுமே அமையாது!

ஆனல் மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சனைகள் நாடுகடத்தப்படவிருக்கும் தமிழர்களிடம் நேரடியாக உருவாகும். உருவாகுகின்ற வேளையில் உயிர்வாழ உணவு, உடை, இல்லம் வேண்டும். உணவு வேண்டுமானல் நிலம் வேண்டும்! உடை வேண்டுமானல் நிலம் வேண்டும்! இல்லம் வேண்டுமானல் நிலம் வேண்டும்!

தமிழர்களே. சிந்தியுங்கள்!! எதிர்காலத்தில் நாங்கள் வாழ்வதற்கு எங்கள் நிலம் பாதுகாக்கப் பட வேண்டுமா? இன்று எங்கள் நிலம் எங்களிடம் இருக்கின்றதா???

நாம் வாழ வேண்டுமானல் எம்மை ஆள வேண்டும்!

**'ஈழ விடுதலை' சந்தா விபரம்**

இங்கிலாந்து: £2.00 (தபாற்செலவு உட்பட)
ஏனைய வெளிநாடுகள்: £2.50 (விமான அஞ்சல்)

ஈழ விடுதலை பெறவிரும்புவோர் உரிய தொகைக்குக் காசோலையோ, அஞ்சல்ஆணையோ 'ஈழ விடுதலை' என்னும் பெயரில் எழுதி அனுப்பி வைக்கவும். அனுப்பவேண்டிய முகவரி: 149, ENDLESHAM ROAD, LONDON S.W.12.

# யாரை....

3ம் பக்கத் தொடர்ச்சி......

...... ஒப்பந்தத்தையும் எடுத்துப் பார்க்கலாம். எதை ஏற்றுக் கொண்டார்கள் முதலெனில் போராட்டத்தில் கலந்து கொள்ளும் தமிழ்-சிங்கள மக்களுக்கிடையே போராட்டம் முடிந்தவுடன் சரியான கருத்தொற்றுமை ஏற்படலாம் என்பது எதிர்க்கப்படும் ஆளும் சக்தி, இந்த இரு பகுதியையும் எப்படித் தாக்குகிறார்கள் என்பதைப் பொறுத்தது! எப்படித் தாக்கினலும் இப்படியொரு இணைப்பு என்றுமே ஏற்படமுடியாதென்ற ஈழ விடுதலை அசையாத கருத்துத் தெரிவிக்கின்றது.

இந்த இணைப்பைப் பற்றிய அடிப்படைக் கருத்து விளக்கத்தோடு இரு பகுதிகளிலும் செயல் படுவது யார்? அவர்களது தொடர்பென்ன? இரு இனங்களின் தலைவிதியையும் ஒன்றாக நிர்ணயிக்கவுள்ள அவர்களின் உடன்பாடென்ன? அந்த உரிமையை அவர்களுக்குக் கொடுத்த மக்கள் யார்? கடந்த 27வருடங்களாகச் சூடுபட்டுவரும் தமிழினம், குறைந்தது, இவர்களையாவது அறிந்து கொள்ள வேண்டாமா? யாரை ஏமாற்றுகிறார்கள் இவர்கள்? இருட்டறையில் ஒளிந்து வாழ்பவர்கள் இரு சக்திகளா? அல்லது ஒருபக்கத்து ஏமாற்றுவித்தையா? இப்படியும் தமிழர்களை ஏமாற்றலாம் என்பது இவர்கள் பகற்கனவு!

இறுதியாக, ஈழ விடுதலை தமிழ் மக்களுக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கும் அளிக்கும் உண்மை இது தான்! இலங்கையில் சிங்கள ஏகாதிபத்திய எதேச்சாதிகாரம் சிங்களவர்களையும் தமிழர்களையும் இருவகையில் நசுக்குகின்றது என்பது தெளிவானது.

1. சிங்கள பாட்டாளி மக்களை முதலாளித்துவமும், நிலப் பிரபுத்துவமும் நசுக்குகின்றது!
2. நசுக்கப்படுகின்ற சிங்களப் பாட்டாளிக் குரலுக்குச் செவிசாய்க்க, தமிழினத்தை அடியோடு வேரறுக்கின்றது சிங்கள ஏகாதிபத்தியம்!

தமிழரின் மொழியையும், கலை-கலாச்சாரத்தையும், நிலத்தையும், கல்வியையும், தொழிலையும், இரத்தத்தையும் உறுஞ்சி அநுபவித்துவரும் சிங்களத் தொழிலாளி வர்க்கம், இறுதியாகப் போராடவேண்டியது தமிழினத்தைப் பிரிந்து தமக்கும் தமது புத்த மதகுருக்களுக்கும் நல்ல தரமானவாழ்வு கொடுக்கமுடியாத அரசின் கொள்கைகளை எதிர்த்து; அதைச் செய்யுமா சிங்களத் தொழிலாளி வர்க்கம்??? அல்லது, தொழிலாளி-விவசாயி வர்க்கப் புரட்சிபற்றி கால்நூற்றாண்டு காலத்துக்கு அதிகமாக வி. பொன்னம்பலம், நா. சண்முகதாசன், பாலா தம்பு போன்றவர்களால் போதித்துக் கட்டிவளர்க்கப்பட்டு, புதிய மேதின ஊர்வலங்களில் 'தோசைவடை, கள்ளத்தோணி, பறத்தமிழன்' எனக் கூச்சல் போட்டது போல் இப்பொழுதும் கூச்சல்போடுமோ??? இதற்குரிய பதிலை உலகசகோதரத்துவ மாயையில் மூழ்கியுள்ளதாக நடிக்கும், யதார்த்தநிலை உணராத சில நரிகள் கூற வேண்டும்! பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் மோசடிகள் வேண்டாம்!

முடிவாக, தமிழினத்தின் பெயரால், ஈழ விடுதலை பின்வரும் இரு வினாக்களையும் இவர்களிடம் கேட்க விரும்புகின்றது.

1. தமிழினத்துக்காக ஒரு சோசலிச ஈழ அரசை அமைக்கப் போராட முன்செல்கிறீர்களா?
2. அன்றேல், தமிழினத்தை ஏமாற்றி ஸ்ரீ லங்கா முழுவதற்குமான சிங்கள சோசலிசப் போராட்டத்துக்காக, மக்களை உண்மைகளை மறைத்து இழுத்துச்செல்ல முனைகிறீர்களா?

தமிழினமே! உன் புத்தியைத் தீட்டு! இலங்கையின் ஏகாதிபத்திய அரசுக்கு எதிரான சக்தி எதுவும் பெரிதாக வளர்ந்துவிடக்கூடாது என்ற தந்திரத்தில் தமிழர்களைக் கட்டம்கட்டமாகப் பிரித்துவைக்கப் பறந்தடிக்கும் குள்ளநரிகளை அடையாளம் கண்டுகொள்! பாம்புகள் நுழைகின்றன, எப்படியாவது தலையை நீட்டிவிட! அவை தமிழினத்தில் அகப்படாமல் தப்பிக்கொண்டால் அது அவை செய்த பாக்கியமாகவே இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கள அரசாங்கத்தின் இனப்பாரபட்சத்தை எடுத்துவிளக்கும், எதிர்ப்புச் சுலோகக் கொடிகளை கைகளில் ஏந்தியவாறு மான்செஸ்டர் கிரிக்கட் மைதானத்துக்குள் ஓடிய ஈழ விடுதலை முன்னணியினரைப் போலிசார் வெளியே இழுத்துச் செல்லும் காட்சி. பூரா விபரங்களும் 6ம் பக்கத்தில்.
புகைப்படம் : மான்செஸ்டர் ஈவினிங் நியூஸ்.

6ம் பக்கத் தொடர்ச்சி....

# வைகாசியில்.....

...அவர்கள் கரங்களில் சிங்கள எதிர்ப்புச் சுலோகங்களைக் கொண்ட கொடிகள் ஒலிவீசின. அக்கொடிகளில் BOYCOTT SINHALA (SRI LANKA) RACIST CRICKET TEAM, SRI LANKA'S RACISM = SOUTH AFRICA'S APARTHEID, DONT PLAY WITH APARTHEID, WE LOVE CRICKET- HATE DISCRIMINATION என்னும் வாக்கியங்கள் காணப்பட்டன. ஆட்டம் தடைப்பட்டது. பார்வையாளர்களில் என்னவேது என்று புரியாதவர்கள், கூச்சல் போட்டனர். மைதானத்தின் நடுவில்படுத்த முன்னணியினரை எழுந்துசெல்லும்படி மேற்கிந்தியநாட்டு விளையாட்டு வீரர்களும், ஆட்ட மத்தியஸ்தர்களும் வேண்டிக்கொண்டனர். யாரது பேச்சுக்கும் செவிசாய்க்காத இளைஞர்கள் மேற்கிந்திய விளையாட்டு வீரர்களுக்குத் தங்களது செய்கைக்கான விளக்கத்தை எடுத்துக்கூறினர். நாலாபக்கங்களிலும் இருந்து மைதானத்துக்குள் நுழைந்த போலிசார் இளைஞர்களை எழுந்துபோகுமாறு கூறினர். அவர்களது பேச்சைமதியாமல் தங்களது கடமையிலேயே கண்ணாயிருந்த இளைஞர்களை ஒவ்வொருவராக வெளியே இழுத்துச்சென்றனர், போலிசார்! பத்திரிகையாளர்களின் புகைப்படக்கருவிகள் கிளிக்கிளிக்கென நடந்தவைகளைப் படமாக்கின. ஆட்டத்தைப் பற்றிய வர்ணனைகளை வானொலியில் சொல்லிக் கொண்டிருந்த வர்ணனையாளர், ஆட்டம் தடைப்பட்ட 15நிமிட நேரத்திலும் இளைஞர்களின் செய்கைகளைப்பற்றியும் அதற்குரிய காரணங்களையும் வானொலியில் தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தார். வெளியே இழுத்துவரப்பட்ட முன்னணியினர் போலிஸ்வாகனங்களில் போலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு ஒவ்வொருவராக வாக்குமூலம் வாங்கப்பட்டபின்னர் சிறையிலேவைத்துப் பூட்டப்பட்டனர்! இளைஞர்களைப் போலிசார் இழுத்துச் செல்வதை மைதானத்துக்கு வெளியே நின்ற சக முன்னணியினர் பார்த்து, ஏற்கனவே ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தபடி, வயதிலும் அறிவிலும் முதிர்ந்த இரு பெரியவர்களைப் போலிஸ்நிலையத்துக்கு அனுப்பிவைத்தனர். சிறையிலே அடைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்குத் தாம் பிணைநிற்பதாகக் கூறிய அப்பெரியோர்களின் பேச்சுக்குச் செவிசாய்த்த போலிஸ் தலைமை அதிகாரி இளைஞர்களை உடனடியாக வெளியேவிடச் சம்மதிக்கவில்லை. அன்றைய ஆட்டம் முடிவடையும்வரை அவர்களைச் சிறையிலே அடைத்துவைத்து லண்டனிலே உள்ள அவர்களது விலாசங்களைச் சரிபார்ப்பதற்கு லண்டன் போலிசாருக்குத் தகவல் அனுப்பினர். முழு விபரங்களும் வந்துசேர மாலை 5 மணியாகிவிட்டது. அதன்பின்னரே இளைஞர்கள் விடுதலைசெய்யப் பட்டனர். அவர்களது செய்கையைக் கடுமையாகக் கண்டித்த போலிஸ்தலைமை அதிகாரி "நீதி மன்றத்துக்கு இதை அறிவிப்பேன், வழக்குக்குத் தயாராகுங்கள்" என்று எச்சரித்தார். இதையெல்லாம் எதிர்பார்த்தே உள்ளே சென்ற இளைஞர்கள் முகங்களில் புன்சிரிப்புத் தவழ வெளியேவந்தனர்! வெளியேவந்த இளைஞர்களை ஈழ விடுதலை முன்னணித் தோழர்களுடன் "ஸ்ரீலங்கா கிரிக்கட் ஆட்டம் தடைப்பட்டது" என்ற தலைப்புடன் 'மான்செஸ்டர் ஈவினிங் நியூசில்' வந்த செய்தியும் புகைப்படமும் வரவேற்றன. 48மணி நேரங்களாகக் கண்விழித்தும், எடுத்த காரியத்தைத் திறம்படச் செய்த முன்னணியினர், அன்று இரவே சிரமத்தைப் பாராது போல்ரன் மான்செஸ்டரில் உள்ள இளைஞர்களுடன் கலந்துரையாடி ஈழ விடுதலை முன்னணிக்கான பலமிக்க மான்செஸ்டர் கிளையை ஆரம்பித்தனர். அன்றிரவே 3மணியளவில் லண்டனை நோக்கிப் புறப்பட்ட முன்னணியினர் அடுத்ததாக லண்டன் ஓவல் திடலில் அவுஸ்திரேலியக் குழுவுடன் ஸ்ரீலங்கா ஆடவிருக்கும் ஆட்டத்தில் பலமான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான திட்டத்தைத் தீட்ட ஆரம்பித்தனர். மறுநாள் காலை லண்டன் வந்தடைந்த முன்னணியினரை ஞாயிறுகாலை வெளியாகிய SUNDAY TELEGRAPH, SUNDAY EXPRESS போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளும், NEWS OF THE WORLD பத்திரிகையில் வந்த புகைப்படமும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தின.

லண்டன் ஓவல் திடலில் எதிர்ப்புக் கோஷம்!!! 27 தமிழ் இளைஞர்கள் மைதானநடுவில்!!!

ஈழத் தமிழர் பிரச்சனை முதன்முதலாக தொலைகாட்சியில்!!! 'கார்டியன்—டெலிகிராப்' பத்திரிகைகளில் புகைப்படங்களும் விளக்கங்களும்!!! வலுச் சண்டைக்கு வந்த சிங்களவர்களுக்குத் தகுந்தபாடம் கற்பிக்கப்பட்டது!!! மான்செஸ்டர் நீதிமன்றத்தில் முன்னணியினரின் உரிமைக்குரல்!!!

(அனைத்தையும் அடுத்த இதழ் 'ஈழவிடுதலை' தரும்.)

இவ் 'ஈழ விடுதலை' இதழ் 149, ENDLESHAM ROAD, LONDON, S.W. 12ல் இருந்து ஈழ விடுதலை முன்னணியினருக்காக, ஈழ விடுதலைப் பிரசுரத்தால் வெளியிடப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்